
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1279

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## மாநாடு

ர.பிரகாசு

126

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**




ஓவியம் : சிகரன்

# கொடி ஏற்றும் வழக்கம் ஏன்?

‘கோபி மாவட்ட திராவிட இளைஞர் மாநாடு’ 27.05.1944 அன்று நடைபெற்றது. வெங்கிடாசலம்பேட்டையில் அமைக்கப்பட்டிருந்த ‘செல்வம் பந்தலில்’ மாநாடு கூடியது. கோவை ஜில்லாவின் பல பகுதிகளில் இருந்தும் ஏராளமானோர் மாநாட்டிற்கு வருகைதந்திருந்தனர். நிகழ்ச்சியின் தொடக்கத்தில், டி.வி.நாராயணசாமி பாடல்கள் பாடினார். அன்னை மணியம்மையார் தராசுக்கொடியை ஏற்றிவைத்து, இந்த வழக்கம் ஏன் வந்தது என்பதை விளக்கும் வகையில், நீண்டதொரு சொற்பொழிவு ஆற்றினார்.

“ஒரு நாட்டைக் குறிப்பதற்கும் ஓர் அரசைக் குறிப்பதற்கும் அறிகுறியாய் இருந்து வருவது கொடியே ஆகும்.

திராவிட நாடும் திராவிட சமுதாயமும் திராவிடத் தனி ஆட்சியும் புராண இதிகாசங்களுக்கு முன்பிருந்தே இருந்துவந்திருக்கிறது. சரித்திரக் காலத்திற்கு முன்பிருந்தே வெகுகாலமாக இருந்துவந்ததான நம் திராவிட நாடும் சமுதாயமும் ஆட்சியும் மறைவுபட்டு, அன்னியர் ஆதிக்கத்திற்கும் சுரண்டலுக்கும் ஏவல் கொள்ளுதலுக்கும் ஆளாகி, ஈன நிலையில் இப்போது உள்ளோம்.

நம் நாடும் சமுதாயமும் அடியோடு மறைந்து அழிந்துபோன, நம் அரசும் மறுபடியும் புத்துயிர் பெற்று எழ வேண்டுமானால், அவற்றிற்கேற்ப இலட்சியத்தையும் உணர்ச்சியையும் ஊக்கத்தையும் குறிக்கும்படியான சின்னமாக நம் திராவிடக்கொடியை திராவிட மக்கள் யாவரும் கருத வேண்டும். அதற்காகவே இக்கொடி சின்னத்தையும் இம்மாதிரி மாநாடுகளில் கொடி ஏற்றும் வழக்கத்தையும் நாம் கையாண்டுவருகிறோம்” என்றார், அன்னை மணியம்மையார்.

அதன் பிறகு, தந்தை பெரியார் அவர்கள் பலத்த கைதட்டலுக்கு இடையே மாநாட்டைத் திறந்துவைத்து, அரியதொரு சொற்பொழிவாற்றினார்.

“ஆரியர்கள் சிறு கூட்டத்தினராய் இருந்தும் இந்த நாட்டுப் பெருங்குடி மக்களை பல நூற்றாண்டுகளாக அடிமை கொண்டு போக வாழ்வு வாழ்ந்து வருவதற்குக் காரணம், அவர்களுள் இருந்துவரும் இன உணர்ச்சியின் காரணமான ஒற்றுமையே. ஆனால், நம்மிடையே ஒற்றுமை கிஞ்சிற்றேனும் இல்லாத காரணத்தால் உண்மையான சுரண்டல்காரர்கள் யார் என்பதை, மறந்து, தேசியம் பேசி வருகிறோம். உண்மையை நோக்கும் எவரும் நம்மை அடிமை கொண்டிருப்பது ஆரியமே அல்லாது அந்நிய ஆட்சி அல்ல” என்று வரவேற்புரை ஆற்றிய கோ.பொ.சேதுராமன் கூறினார்.

மாநாட்டுக்குத் தலைமை வகித்த நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், திராவிடர்களின் நிலை குறித்தும், திராவிட நாட்டு மக்களின் கடமைகள் குறித்தும், திராவிட நாட்டுப் பிரிவினையின் அவசியம் குறித்தும் பேசினார். மதிய உணவு இடைவேளைக்கு முன்பாக, பெரியார், அண்ணா, நாவலர் ஆகியோருக்கு வரவேற்புப் பத்திரங்கள் வாசிக்கப்பட்டன. மீண்டும் பிற்பகல் 3 மணிக்கு மாநாடு தொடங்கியது. பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பெரியார், பொன்னம்பலனார், டி.வி. நாராயணசாமி, ஜி.என்.ராஜு, ஈ.வி.கே. சம்பத், எஸ்.ஆர்.சந்தானம் ஆகியோர் தீர்மானங்களை விளக்கிப்பேசினர். திராவிட நாட்டுப் படத்தைத் திறந்துவைத்து பேசிய அண்ணா, ஆரியம் திராவிடர்களை எவ்வாறு அடிமைப்படுத்தி வைத்திருக்கிறது என்பதையும், ‘திராவிட நாடு’ பிரிவினையின் அவசியத்தையும் பல்வேறு உதாரணங்களுடன் விளக்கிப் பேசினார். இறுதியாக, பெரியாரின் முடிவுரையுடன் மாநாடு முடிவுற்றது.

**...கூட்டம் திரளும்**

## வதந்திகளைப் பரப்புபவர்களிடமே உண்மை சரிபார்ப்பகம்!

இந்திய அளவில் வதந்திகளாலும், பொய்த் தகவல்களாலும் வளர்ந்த கட்சி என்றால் அது பா.ஜ.க.தான். அதேபோல, தமிழ்நாட்டில் பொய்ச் செய்திகளை அதிகம் பரப்பும் கட்சி த.வெ.க. என்பது, கடந்த தேர்தலும் தேர்தலுக்குப் பின்னர் த.வெ.க.வுக்காக உருவாக்கப்படும் கருத்துகளில் இருந்து அறியலாம். இப்படியான நிலையில், வதந்திகள், பொய்த் தகவல்களைச் சரிபார்க்க, கடந்த கழக ஆட்சியில் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் தகவல் சரிபார்ப்பகத்தின் பொறுப்பாளராக, விஜய்யின் ஆன்லைன் ரசிகர் மன்றத் தலைவர் குரு நியமிக்கப்பட்டுள்ளாதவும், அந்தப் பிரிவின் பெயர், ‘தகவல் நம்பகத்தன்மைப் பிரிவு’ எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. அதேபோல, த.வெ.க. ஐ.டி. விங்கைச் சேர்ந்த திவ்யா, மக்கள் தொடர்புத் துறையின் சிறப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன. அந்தக் கட்சியின் மக்கள் பிரதிநிதிகள் தகுதியானவர்களாக இல்லை என்றால், அரசு நிர்வாகத்திலும் தங்கள் கட்சி அலுவலகத்தில் பணியாற்றியவர்களை நியமிப்பதைப் பலரும் கண்டித்துவருகின்றனர். இதனைக் கண்டித்து, “தவறான தகவல்களை அதிகம் பரப்புவது, த.வெ.க.வைச் சேர்ந்தவர்களாகவே இருப்பதுதான் கவலை கொள்ள வைக்கிறது” என்று சில உதாரணங்களைப் பகிர்ந்துள்ளார், பத்திரிகையாளர் டி.வி.சோமு.

**உதாரணம்:**

தமிழ்நாடு அரசு வாங்கிய கடனில், எனது தலைமீது இருக்கும் கடனை அடைக்கிறேன் என்று அமைச்சரிடமே நிதி அளிப்பது. இப்படிச் செய்யவே முடியாது என்பதை விளக்கலாம்.

பாலியல் பலாத்காரத்திற்குத் தூக்குத் தண்டனை என த.வெ.க. ஆதரவுப் பெண்மணி பேசுவது.

இப்படியொரு சட்டம் இல்லை என்பதைச் சொல்லலாம்.

தனது சொந்தப் பணத்தில் விஜய் இலவசத் திட்டங்களைச் செய்து தருவார் எனத் ‘த.வெ.க. இன்ஃப்ளுயன்ஸர் பெண்மணி’ கூறுவது. அது உண்மையல்ல; அரசுப் பணத்திலேயே கொடுக்கப்படும் என்பதைக் கூறலாம்.

ஆகவே, த.வெ.க. கட்சியினர், ஆதரவாளர்கள், இன்ப்ளுயன்ஸர்கள் தவறான தகவல்களைப் பரப்பக் கூடாது எனக் கட்சி சார்பாக உத்தரவிட்டாலே, பல வதந்திகள் நின்றுபோகும். அதையும் செய்யுங்கள்!” என்று குறிப்பிட்டுள்ளார்.


## பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

126

**சுயமரியாதை - சமத்துவம் - சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# கோயில் கூடாது என்பதல்ல...




அரசின் கட்டுப்பாட்டிலிருந்து கோயில்களை மீட்க இந்து மதவெறி சக்திகள் இயக்கம் நடத்திகொண்டிருக்கும் காலமிது. அதற்குக் காரணம், மக்களின் உரிமைகளை மையமாகக் கொண்டு கோயில்களில் அரசு ஏற்படுத்தியுள்ள ஜனநாயகத்தன்மை. அதுதான் மதவாதக் கூச்சலுக்குப் பிரதான காரணமாகப் பார்க்கிறோம்.

‘வைக்கம் போராட்டம்’, ‘சுயமரியாதை இயக்கம்’, ‘தமிழ்நாட்டில் அறநிலையத் துறை உருவாக்கம்’ இவை எல்லாம் ஏற்பட்டு நூறாண்டுகள் கடந்துவிட்டன. கோயில்களில் பார்ப்பனரல்லாத மக்களுக்கு அனுமதியில்லை என்ற நிலை மாறி, இன்றைக்கு கோயில்களில் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஆலயங்களில் நடைபெற்ற இந்த மாற்றங்களை எல்லாம், மிகத் துல்லியமாகப் பதிவுசெய்யும் நூல், *‘THE PEOPLE’S SANCTUM: THE 100-YEAR STRUGGLE TO DEMOCRATIZE TEMPLES IN INDIA’*. தி.மு.கழகச் செய்தித் தொடர்பாளரும் வழக்கறிஞருமான மனுராஜ் சண்முகசுந்தரம் அவர்களின் முதல் நூல் இது. பென்குயின் பதிப்பகம் இந்நூலை வெளியிட்டுள்ளது.

கோயில்களின் வரலாற்றுக் காலம் முதல், சமகாலம் வரை அதற்கும் மக்களுக்கும் இடையில் நிலவிவரும் உறவும் அதில் அரசின் தலையீடு ஏற்படுத்திய முற்போக்கான மாற்றங்களும் தான் இந்நூலின் கரு.

மன்னராட்சி முதல் மக்களாட்சி வரை கோயில்கள் அடைந்த பண்புமாற்றங்கள், தந்தை பெரியாரால் ஊக்கம்பெற்று, வெற்றிகண்ட ‘வைக்கம் போராட்டம்’, நீதிக் கட்சி ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட ‘இந்து சமய அறநிலையப் பாதுகாப்புச் சட்டம்’, ‘மெட்ராஸ் மாகாணத்தில் உருவாக்கப்பட்ட ஆலய நுழைவுச் சட்டம்’, ‘இந்திய அரசியலமைப்புச் சட்டம் மதச்சார்பின்மையை அணுகிய விதம்’, ‘அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் சட்டம்’ ஆகியவை குறித்து, இந்நூலின் பல்வேறு அத்தியாயங்கள் விளக்குகின்றன.

மத நிறுவனங்களிடம் இருந்து அரசு விலகியிருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும், ‘மதச்சார்பின்மைக் கருத்தியல்’ இந்தியாவில் நெகிழ்வுத் தன்மை கொண்ட ஒன்றாகவே இருக்கிறது. காரணம், இந்து மதத்தில் சாதி ஏற்படுத்திய இயலாமைகளில் இருந்து, மக்களைக் காத்து, அவர்களுக்கான சமத்துவத்தை நிலைநாட்ட, அரசின் தலையீடு அவசியமாகிறது.

அப்படி பார்ப்பனர் அல்லாதார் உரிமைகளை அரசியல் தளத்தில் ஒலித்த நீதிக்கட்சி, அதை சமூக இயக்கமாக்கி, பல புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்திய தந்தை பெரியார், கருத்தியலாக இருந்தவற்றுக்குச் சட்ட அங்கீகாரம் பெற்றுத்தந்த தி.மு.கழகம், தொடர்ந்து சட்டப் போராட்டங்களை நடத்தி, அவற்றைப் பாதுகாத்துவரும் திராவிடக் கட்சிகள் என திராவிட இயக்கத்தின் தொடர் அர்ப்பணிப்புமிக்க அரசியல் செயற்பாடுகளை, இந்நூல் ஆசிரியர் ‘மெட்ராஸ் மாடல்’ என்று விளிக்கிறார்.

இந்தியாவில் மதச்சார்பின்மை அடைந்துள்ள மாற்றங்களை, ‘மெட்ராஸ் மாடலை’, வைத்தே புரிந்துகொள்ளலாம் என்றும், இந்த மாடலில் ஏற்படும் மாற்றங்கள்தான் இந்தியாவில் அடுத்த நூறாண்டுக்காலம் மதச்சார்பின்மைக் கருத்தியலையே தீர்மானிக்கும் என்றும் தெளிவுபடுத்துகிறார்.

திராவிட இயக்கத்தின் நூற்றாண்டுப் பங்களிப்பை ஆவணப்படுத்தியும், கோயில்கள் அரசின் கட்டுப்பாட்டில் இயங்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும், தக்க சமயத்தில் வெளியாகியுள்ளது இந்நூல். வாங்கிப் படிப்பதும் வரவேற்கவேண்டியதும் நம் கடமை.

“திராவிட இயக்கத்தின் நூற்றாண்டுப் பங்களிப்பை ஆவணப்படுத்தியும், கோயில்கள் அரசின் கட்டுப்பாட்டில் இயங்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும், தக்க சமயத்தில் வெளியாகியுள்ளது இந்நூல்.”

**...வாசிப்போம்.**

## ஃப்ளாஷ்பேக்




### பாசறைக் கூட்டத்தில் தலைவர்!



பா.அன்பழகன்

2016-ஆம் ஆண்டு, அன்றைய கழகப் பொருளாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள், திருவண்ணாமலை மாவட்ட இளைஞர் அணிப் பயிற்சிப் பாசறைக் கூட்டத்துக்கு வருகைதந்து, கலந்துகொண்டவர்களுக்கு வாழ்த்துரை வழங்கினார்கள். அப்போது, வேளாண் அமைச்சர் அண்ணன் எ.வ.வேலு அவர்கள் அளித்த அன்புப் பரிசினைத் தலைவர் அவர்கள் அளித்தபோது எடுத்துக்கொண்ட படம்.

**- பா.அன்பழகன்,**
**வேடந்தவாடி, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்,**
**துரிஞ்சாபுரம் கிழக்கு ஒன்றியம், திருவண்ணாமலை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### சென்னையில் கழகத்தின் செல்வாக்கு

1961-ஆம் ஆண்டு நவம்பர் மாதம், ஆண்டுதோறும் நடைபெறவேண்டிய சென்னை நகர மேயர் தேர்தல், அன்றைய மேயர் வி.முனுசாமி தலைமையில் நடைபெற்றது. மேயர் பதவிக்குக் கழகத்தின் சார்பாக ஜி.குசேலர் வேட்பாளராக நிறுத்தப்பட்டார். 95 உறுப்பினர்களில், தி.மு. கழக வேட்பாளர் ஜி.குசேலர், 48 வாக்குகள் பெற்று மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். துணை மேயராக, கழகத்தைச் சேர்ந்த மு. வேதாசலம் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900